1992 செப்டம்பர் 21]

பூங்காவைப்பற்றி பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் வகையில் செய்திப்படம் தயாரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் வரலாற்றைப் படைத்த நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிற அந்த அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பிறகு, அதற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யலாம் என்று ஆணை பிறப்பித்து உத்திரவிட்டிருக்கி றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பணிகள் இப்போது விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்தைப் பற்றிக் கேட்டார்கள். அந்தப் பகுதியிலேயிருந்து 16 வழித் தடங்களில் பொது மக்கள் செல்வதற்கு இன்றைக்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 9, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

9—

மேலப்பாளையத்தில் நூற்பாலை

*9341—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதியை தொழிலில் பின்தங்கிய தொகுதியாக கடந்த சட்டமன்றத் கூட்டத் தொடரில் அறிவித்த நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பாளையங்

கோட்டை தொகுதி மக்களின் சார்பாக வணக்கத்தையும்' நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டை தொகுதியில் எல்லா வசதிகள் இருந்தும், தொழில்கள் எதுவும் இல்லாத நகரமாக விளங்குகிறது. எனவே பாளையங் கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பு ஆலை அமைக்க கருணை உள்ளம் கொண்ட நமது அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் பேட்டையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை 50 ஆயிரம் கதிர்களுடனும், பாரதி கூட்டுறவு நூற்பு ஆலை 12 ஆயிரம் கதிர்களுடனும் செயல்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர தமிழகத்தில் 17 நூற்பு ஆலைகள் இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக இவைகள 13.52 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூலையும், 11.52 இலட்சம் கி.கிராம் கோன் நூலையும்உற்பத்தி செய்கிறது. தற்போது தமிழகத்தில் நூல் உற்பத்தியில் உபரியாக இருக்கிற காரணத்தால்இதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 10, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

10—

சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 10331—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டும், குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சங்ககிரி செயற்பொறியாளர் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ள குழாய்த் தொடரமைப்பை மாற்றி யமைக்கும் (Diversion Pipe Line) திட்டத்தை இவ்வாண்டில் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.